தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# ‘மண் சிதைவால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது’

**கோவை, டிச. 4–**

‘‘மண் சிதைவால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது,’’ என, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குனர் குன்னிகண்ணன் பேசினார். உலக மண் தினத்தை முன்னிட்டு, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குநர் குன்னிகண்ணன் பேசியதாவது:

நிலத்திற்கு மேல் மற்றும் கீழ் பல்லுயிர் பெருக்கத்தை பராமரிக்க மண்வளம் அவசியம். சுத்தமான நீரைப் பாதுகாத்து, கால நிலையை சீராக்க மண் வளம் உதவுகிறது.

வளமான மண் நுண்ணுயிரிகளால் நிறைந்துள்ளது. மண்ணின் நுண்ணுயிரிகளும் ஊட்டச்சத்து சுழற்சியில் இன்றியமையாத பாத்திரங்களை வகிக்கின்றன.

மண் சிதைவு விவசாய விளைச்சலைக் குறைக்கிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்துகிறது. மண் இழப்பு பரவலான வறுமை மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சியாக கருதப்படுகிறது. வருங்கால சந்ததியினர் மண்ணைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு, அவர்பேசினார்.

வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மாணவர்கள், பொதுமக்களுக்காக ஆன்லைன் விழிப்புணர்வு வினாடி–வினா நடத்தப்பட்டது.

பங்கேற்றவர்களுக்கு இ–சான்றிதழ் வழங்கப்பட்டது. மண்ணின் உற்பத்தியை அதிகரிக்கும் குறிப்புகளை கொண்ட விழிப்புணர்வு போஸ்டர் வெளியிடப்பட்டது.

சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மைய மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

69. News in Dinamalar, Coimbatore, 04.12.2021, Digital Observance World Soil Day by IFGTB ENVIS.